செய்தி வெளியீடு எண்: 039 நாள் : 23.01.2015

பொது (தேர்தல்கள்–7)த் துறை

## செய்தி வெளியீடு

## 25–1–2015– தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டங்கள்

ஜனநாயக தேர்தல் முறைகளில் குடிமக்கள் தங்கள் பங்களிப்பை அதிகப்படுத்தும் ஒரு முயற்சியாக இந்தியத் தேர்தல் ஆணையம் தனது நிறுவன நாளான ஜனவரி 25–ம் தேதியை தேசிய வாக்காளர் தினமாக ஒவ்வொரு வருடமும் 2011–ஆம் ஆண்டிலிருந்து கொண்டாட வேண்டும் என்று அறிவித்துள்ளது. இந்த ஆண்டு ஜனவரி 25–ஆம் நாளை ஐந்தாவது தேசிய வாக்காளர் தினமாக மாநிலமெங்கும் நாம் கொண்டாடுகின்றோம். இந்த ஆண்டின் மையநோக்கு ‘சுலபமான பதிவு; சுலபமான திருத்தம்’ என்பதாகும்.

தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டங்களுக்கு மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் மற்றும் 64094 வாக்குச்சாவடிகள் அமைந்துள்ள அனைத்து 28850 வாக்குச் சாவடி அமைவிடங்களிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மாநில அளவிலான விழா மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் தலைமையில் 25.1.2015 அன்று காலை 11.00 மணியளவில் ஆளுநர் மாளிகையில் நடைபெறும். அவ்விழாவில், ஆளுநர் அவர்கள் தேசிய வாக்காளர் தின உறுதிமொழியினை ஏற்கவைத்து, சிறப்புரையாற்றுவார். சிறப்பான முறையில் தேர்தல் பணி புரிந்த அலுவலர்களுக்கு விருது வழங்குவதுடன் புதிதாக பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களுக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையினையும் அவர் வழங்குவார். தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர், டாக்டர். சோ. அய்யர், இ.ஆ.ப (ஓய்வு)., அவர்களும், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., அவர்களும் வாழ்த்துரை வழங்குவார்கள்.

வலுவான ஜனநாயகத்திற்கு பெருமளவில் பங்கேற்றலின் முக்கியத்துவத்தையும் அதில் இளைஞர்களின் பங்கையும், ‘சுலபமான பதிவு; சுலபமான திருத்தம்’ என்னும் மையக்கருத்தை உணர்த்தும் வகையில் இவ்விழாவில் பள்ளிச் சிறார் மற்றும் மத்திய அரசின் செய்தி மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் சார்ந்த கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெறும்.

இதே போல் மாவட்ட அளவிலான விழாக்களிலும் வாக்குச் சாவடி நிலையிலான விழாக்களிலும் தேசிய வாக்காளர் தினத்திற்கான உறுதிமொழியினை வாக்காளர்களை ஏற்கச் செய்வதோடு புதிதாக பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டைகளும் வழங்கப்படவுள்ளன. மேலும், ஜனவரி 23, 2015 அன்று 11.00 மணியளவில் அரசு அலுவலகங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் வாக்காளர் உறுதிமொழி ஏற்கப்படும். இதேபோல் 26.01.2015 அன்று நடைபெறவிருக்கும் கிராம சபைக்கூட்டங்களில் வாக்காளர் உறுதிமொழி ஏற்கப்படும். சென்னையில் நடைபெறவுள்ள குடியரசு தின விழாப்பேரணியில் ‘சுலபமான பதிவு; சுலபமான திருத்தம்’ என்னும் மையநோக்கின் அடிப்படை குறித்த ஒரு அலங்கார ஊர்தியும் இடம் பெறும். தேசிய வாக்காளர் தினத்திற்கு முன்னோடி நிகழ்ச்சிகளாக மாவட்டங்களில் ஏற்கனவே பேரணிகள், மினிமராத்தான் ஓட்டங்கள், விவாதங்கள், மனித சங்கிலி நிகழ்ச்சிகள், வீதி நாடகங்கள், பலூன்கள் மூலம் விளம்பரங்கள் முதலியவை நடத்தப்பட்டு வருகின்றன.

சட்டத்திற்குப் புறம்பான தூண்டுதல்களுக்கு ஆட்படாமல் கண்ணியத்துடன் மனசாட்சிப்படி வாக்காளித்தல் மற்றும் வாக்காளர் பங்கேற்பை அதிகப்படுத்துதல் ஆகியவற்றை மையப்படுத்தி பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. இவ்விரு செய்திகளையும் பரப்புரை செய்திட அரசுத் துறைகளின் களப்பணியாளர்களையும் இதில் ஈடுபடுத்தியுள்ளோம்.

இந்த நடவடிக்கைகள், புதிய வாக்காளர்களுக்கு கடமையுணர்வுடன் ஜனநாயகத்தை வலிமையடையச் செய்ய அவர்களின் சிறந்த பங்கேற்பை வழங்கிட உந்து சக்தியாக விளங்கும். பல்வேறு சமூக அமைப்புகள், அரசு சாரா தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், ஊடகங்கள், பெண்கள் மற்றும் இளைஞர் அமைப்புகள் ஆகியவை தேசிய வாக்காளர் தினத்தினை சிறப்பாக கொண்டாடுவதற்காக முழுமையான ஆதரவினை நல்கிடுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மாநில அளவிலான தேசிய வாக்காளர் தின விழா நிகழ்ச்சியினை தலைமை தேர்தல் அதிகாரியின் இணையதளத்தில் www.elections.tn.gov.in காலை 10.55 முதல் நேரடி ஒளிபரப்பின் மூலம் காணலாம்.

தலைமைத் தேர்தல் அதிகாரி
தமிழ்நாடு

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**